**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.332/2022**

பி.**வா.சா. – 1 – வெங்கடேசன்**

**நாள். 31.07.2025**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு முதல் விசாரணை**

மேற்படி வங்கி கணக்கு தாக்கல் செய்துள்ளதில் கோவிந்த ராஜின் பெயரில் எந்த வித வரவு செலவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பவர் பத்திரமும், பவர் ஏஜென்ட் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் நேடியாக ஜீவ மணி என்பவரிடம் கிரையம் பெற்ற தாக இல்லை என்றும், அவரின் பவர் ஏஜென்ட்டிடம் கிரையம் பெற்றதாக சொன்னேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு பவர் ஏஜென்ட்டிடம் கிரையம் பெற்றதால் அவரிடம் தான் பணம் செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ.1 ல் ஜீவமணி என்பவர் அவரின் பவர் ஏஜெண்ட்க்கு கிரையம் சம்பந்தமாக அனைத்து அதிகாரமும் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள ரூ.1,80,000/– சொத்தானது கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய தொகையானது ரொக்கமாக அன்றைய தினமே பெற்றுக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லியது போல் பொய்யான கிரைய பாக்கி தொகைக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் லோன் வாங்கிய விபரம் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கனரா லோன் வாங்கினேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எவ்வளவு லோன் வாங்கினேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்க நிலுவையில் இருந்து சமயத்தில் நான் வராததால் எனுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு மனு தாக்கல் செய்து அது ரத்தது என்றால் சரிதான். கோவிந்தராஜ் என்னை மோசடி செய்துவிட்டார் என்று போலிஸ் மூலம் நடவடிக்கை எடுக்கவில்லை, காணமால் போனதாகவும், தேடி எடுத்து தருவதாகவும் சொன்னார். நான் காசோலையை கேட்ட தேதி எனக்கு ஞாபகமில்லை. மேற்படி காசோலை டிசானர் ஆனதாக கோவிந்தராஜ் நோட்டீஸ் அனுப்பினார் என்றால் சரிதான். அது வந்த பிறகு கோவிந்தராஜை நான் போய் பார்த்தேன் அதற்கு அவர் இது பற்றி கண்டுகொள்ள வேண்டாம் என்றும், தவறுதலாக அனுப்பட்டது என்று சொன்னார். வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுகொண்டு அதில் உள்ள

விபரங்களை நான் தெரிந்து கொண்டு உடனடியாக சட்டப்படியான எதிர்வினை ஆற்றாமால் அமைதியாக இருந்துவிட்டு தற்போது தேவையில்லாமல் எதிர் வழக்காடுகிறேன் என்றால் தவறு. பதில் கொடுக்காததற்கு தவறான காரணம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் காசோலை கொடுத்தது உண்மை என்றும், அந்த காசோலை வங்கியில் செலுத்திய போது திரும்பி வந்துவிட்டது என்றும், காசோலை தொகை நான் வாதிக்கு சட்டப்படி கொடுக்க வேண்டும் என்றும், தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.31 20:11:50 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.